The Cherian FOUNDATION

.˙.பவுண்டேஷன் நிறுவிய நாள்: 11.03.2003

# எதிர்காலம் வளம்பெற மாற்றங்கள் புரிவோம்

ஜனவரி - டிசம்பர் 2014 | இதழ் 3

* இந்த செய்தி மடல் ராஜ் குடும்ப உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கு மட்டுமே

## செரியன் .˙.பவுண்டேஷன்
## இயக்குநர் உரை



அனைவருக்கும் வணக்கம்!

சமூக சேவையில் மற்றொரு ஆண்டில் அடி எடுத்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இவ்வாண்டு, நீண்ட கால திட்டமாக சென்னையிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள பஞ்செட்டியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதர நிலையத்தை மேம்படுத்த தொடங்கினோம். இம்மருத்துவமனையின் சேவையால் சுற்றுபுறத்தில் உள்ள 8,000 மக்கள் பயனடைகிறார்கள்.

சமுதாயத்தில் மேலும் பல நலதிட்டங்கள் செயல்படுத்த உங்களின் மேலான ஆதரவும், பங்கேற்பும், ஊக்குவிக்கிறது. வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமறைச் சட்டத்தின் **(FCRA Reg. No. 075901394)** அனுமதியை நமது நிறுவனத்திற்கு இந்திய அரசு உள்துறை அமைச்சகம் இவ்வாண்டு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் மூலமாக வெளிநாடுகளிலிருந்தும் நிதி உதவி பெற்று பல நல்ல சமூக சேவை செய்ய திட்டமிட்டுள்ளோம்.

இம்மடலை வாசிக்கும் உங்களையும் ஊக்குவிக்கும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். இவ்வாண்டின் அனைத்து திட்டங்களை செயல்படுத்த உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இப்படிக்கு,

வல்சா பெஞ்சமின் செரியன்
இயக்குநர், தி செரியன் .˙.பவுண்டேஷன்

## முன்னோட்டம் 2014

எழுத்தறிவு





கல்வி உதவி தொகை

சிறந்த பள்ளி விருது



மூக்கு கண்ணாடி



விழிப்புணர்வு நிகழ்ச்சி



இன்வெர்டர்



கண்காட்சி



## நிறுவனத்ததைப் பற்றி

செயல்நோக்கு அறிக்கை: தரமான கல்வி, அடிப்படை ஆரோக்கியம், விழிப்புணர்வு மற்றும் சமூதாய பங்களிப்பின் மூலமாக, ஒரு ஆரோக்கியமான மற்றும் சமூக உணர்வுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்

The Cherian FOUNDATION

சென்னையில் அமைந்துள்ள தி செரியன் .˙.பவுண்டேஷன், 2003 ஆம் ஆண்டு முதல் சமூக சேவையை ஆற்றிவரும் ஒரு தனியார் தொண்டு நிறுவனம். இந்நிறுவனத்தின் நோக்கம், "அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வாய்ப்புகள் இல்லாதவர்களுக்கு வாய்ப்புகளை அமைப்பதே" ஆகும். அவர்கள் வாழ்வில் ஆரோக்கியம் மற்றும் திறன்களை அதிகரிக்க செயல்பட்டு வருகிறது. ராஜ் ஹோல்டிங்ஸ் பணி இடங்களை சுற்றி அமைத்துள்ள பகுதியில் வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு பல நல்ல திட்டங்களை செயல்படுத்துகிறது.

இந்நிறுவனத்தின் சேவையை விரிவாக்க, **RI Dist 3230 Rotary Centenary Charitable Trust,** மற்றும் **Madras Midtown Round Table (MMRT-42)** அடையாறு புற்றுநோய் மருத்துவமனை போன்ற நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. அதன் மூன்று முக்கிய அம்சங்களாவது:

- கல்வி உதவி
- அடிப்படை ஆரோக்கியம்
- வழிப்புணர்வு மற்று சமூதாய பங்களிப்பு

மேலும், கூட்டாண்மை சமூக பொறுப்பு பிரிவாகவும் செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ராஜ் குளோபல் ஹோல்டிங்கில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களும் சமூக சேவை செய்ய அடித்தளமாக விளங்குகிறது.

மேலும் விபரங்கள் **www.cherianfoundation.org** என்ற எங்கள் இனைய தளத்தில் அறிந்துக் கொள்ளலாம், அல்லது 044-49278133 என்ற தொலை பேசியில் சார்லஸ் (திட்ட ஒருங்கிணைப்பாளர்) என்பவரிடம் அறிந்துக் கொள்ளலாம்.

# கல்வி உதவி

## அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக்கு சிறப்பாக பராமரித்த பள்ளி விருது

*"விருது என்பது அர்பணிப்புக்கு, விடாமுயற்சிக்கு சான்றாக அமைகிறது"*

ஒரு திட்டத்தின் தரம் மற்றும் நிலையை சரிபார்க்க பேருதவியாக இருப்பது விருதுகள் என்று நாங்கள் நம்புகிறோம். இதை நினைவில் நிறுத்தி எங்களது பயனாளிகளை ஊக்குவிக்கிறோம். முதல் முறையாக, 'Schools into Smiles' திட்டத்தின் மூலம் RI Dist 3230 Rotary Centenary Charitable Trust தத்தெடுத்த பள்ளிகளுக்கு" சிறந்த பராமரித்த பள்ளி" விருதை அறிவித்தோம். இவ்விருது பள்ளி நிர்வாகத்தை ஊக்குவித்து, அடிப்படை வசதி, கல்வி, சுற்றுப்புற சுகாரதாரம், கட்டமைப்பு வசதிகள், மற்றும் கல்வி சார்ந்த செயல்பாடுகள் போன்றவற்றில் சிறப்பாக செயல்பட உதவும். இத்திட்டம் 2 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படும்.

கடந்த ஆண்டு இந்த விருது வழங்கும் திட்டத்தை 130 அரசு மற்றும் ஊராட்சி பள்ளிகளுக்கு அறிவித்தோம். தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளியை பராமரிக்க எடுத்த நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை புகைப்படத்துடன் காலாண்டு அறிக்கை சமர்ப்பித்தார்கள். தேர்வு செய்யும் பட்சத்தில் பரிசு தொகையை கொண்டு அவர்கள் மேற்கொள்ள போகும் திட்டத்தையும் தெரிவிக்குமாறு பள்ளிகளுக்கு கூறி இருந்தோம். செயற்குழு நேரடியாக மதிப்பீட்ட அறிக்கை மற்றும் பள்ளி அறிக்கையினை கொண்டு, வெற்றியடைந்த 3 பள்ளிகள் தேர்தெடுக்கப்பட்டன. இப்பள்ளிகளுக்கு 'Schools into Smiles' கலை நிகழ்ச்சி - 2013-ல் விருதுகள் அளிக்கப்பட்டன.

### முதல் பரிசு

**பள்ளியின் பெயர்:** ரோட்டரி ராமு ரெட்டியார் பள்ளி, திருவண்ணாமலை


**பரிசு தொகை:** ரூ. 50,000.00

**முக்கிய அம்சங்கள்:** பள்ளி வளாகம் எப்பொழுதும், சுத்தமாகவும், நேர்த்தியாகவும் காணப்பட்டது. 100க்கும் மேற்பட்ட மரங்களை நட்டுள்ளார்கள். உடற்பயிற்சி கல்வி தவறாமல் நடத்தப்பட்டது.

**பரிசு தொகையை பயன்படுத்திய விதம்:** MMRT- 42 மூலமாக கட்டிகொடுக்கப்பட்ட புதிய கட்டிடத்திற்கு தேவையான மின் சாதனப் பொருட்களை வாங்கவும், விளையாட்டு பொருட்கள் வாங்கவும் பயன்படுத்தப்பட்டது.



மின்வசதி கொண்ட வகுப்பறை



விளையாட்டு பொருட்கள்

### இரண்டாம் பரிசு

**பள்ளியின் பெயர்:** வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, செக்டார் - 2

**பரிசு தொகை:** ரூ. 30,000.00

**முக்கிய அம்சங்கள்:** வெளிநாட்டு கல்வி பரிமாற்ற திட்டத்திற்கு பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி. மேலும், மாணவர்கள் மாவட்ட அளவில் மனித பிரமிட் செய்து விருதுகளை பெற்றவர்கள்.

**பரிசு தொகையை பயன்படுத்திய விதம்:** இரண்டு இரும்பு அலமாரிகளையும், ஒரு பெரிய மேசையும், விளையாட்டு பொருட்கள் வாங்கவும் பயன்படுத்தப்பட்டது.



விளையாட்டு பொருட்கள்



ஆவணங்கள் வைக்க அலமாரி




தலைமை ஆசிரியருக்கு மேஜை

### மூன்றாம் பரிசு

**பள்ளியின் பெயர்:** மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, செம்பாசிப்பள்ளி குப்பம்

**பரிசு தொகை:** ரூ. 20,000.00

**முக்கிய அம்சங்கள்:** மாணவர்கள் தூய்மையாகவும், நேர்த்தியாகவும், காணப்படுகிறார்கள். மாவட்ட அளவில் பல்வேறு போட்டிகளில் பரிசுகளை பெற்றுள்ளார்கள்.

**பரிசு தொகையை பயன்படுத்திய விதம்:** ஒலி பெருக்கி சாதனங்கள் வாங்க பயன்படுத்தப்பட்டது.



ஒலி பெருக்கி அமைப்பு

## பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு தி செரியன் ஃபவுண்டேஷன் கல்வி உதவியை வழங்குகிறது. அதற்காக மாணவர்களிடமிருந்து ஜீன் மாதத்தில் மதிப்பெண் சான்றிதழ்கள் பெறப்பட்டது. மொத்தம், 13 மாணவர்கள் கல்வி தகுதி அடிப்படையில் பரிசு தொகையை பெற்றுக் கொண்டார்கள்.



பயனாளிகள் மற்றும் அவர்களது பெற்றோருடன் அறங்காவலர்கள்

## கல்லூரி மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை

தி செரியன் ஃபவுண்டேஷன் செல்வி T. பச்சையம்மாளுக்கு 10-ஆம் வகுப்பு முதல் கல்வி உதவி தொகையை வழங்கி வருகிறது. தற்போது அவள் SIET கல்லூரியில் இறுதி ஆண்டில் படிக்கிறாள். ரூ. 3000 உதவித் தொகையை வழங்கி, அவளது கல்வி கட்டணம் செலுத்த துணை புரிந்தது.

## ரோட்டரி மாதிரி பள்ளிக்கு நீர் தேக்க தொட்டி

நாம் முதன்மையாக இணைந்து செயல்படும் நிறுவனம், மூலமாக 2 பள்ளியை தத்தெடுத்து, பராமரித்து வருகிறோம். அதில் ஒரு பள்ளிதான் முகப்பேரில் உள்ள ரோட்டரி மாதிரி பள்ளி.

இப்பள்ளியில் இருந்த மேல்நிலை தண்ணீர் தொட்டியின் கடுமையான நீர்க்கசிவு காரணமாக, 4 வகுப்பறை சுவர்களை பாதிப்புக்குள்ளாகிய நிலைமை கண்டறியப்பட்டது. எனவே, இதை சரிசெய்யும் வகையில் 1,000 லிட்டர் கொள்ளவு கொண்ட புதிய நீர்தேக்க தொட்டியை நிறுவினோம். இப்பள்ளி மூலம் 165 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.



பழுதடைந்த நீர் தொட்டி



புதிய நீர்தேக்க தொட்டி

## அழிஞ்சிவாக்கத்தில் எழுத்தறிவு திட்டம்

தி செரியன் ஃபவுண்டேஷன் ராஜ் ஹோர் இன்டர்நேசனலுடன் இணைந்து 2012-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம் தொடந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டு, அழிஞ்சிவாக்கத்தில் 20 அடிப்படை கல்வி பெறாத நபர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். எழுத்தறிவு மாதிரி பாடத்திட்டத்தின் அடிப்படையில் எழுத்தறிவு, தமிழ் வார்த்தைகள் எழுதுதல், வாசித்தல், எண் கண்டறிதல் போன்றவை கற்பிக்கப்பட்டன. வாரத்திற்கு ஒருமுறை அரை மணி நேரம் என்ற கணக்கில் 52 வாரங்கள் வகுப்புகள் நடத்தப்பட்டது. தி செரியன் ஃபவுண்டேஷனின் குறிக்கோள்களை நிறைவேற்ற ஒரு தளம் அமைத்துக் கொடுத்த ராஜ் ஹோர் இன்டர்நேசனல் நிறுவனத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றி.



எழுத்தறிவு வகுப்பு



கல்வி நிலை அறிய தேர்வு

## மதிப்பீடு

இத்திட்டத்தின் பயனாளிகளின் கல்வி நிலை அறிய 4 மாதத்திற்கு ஒரு முறை தேர்வுகள் நடத்தப்பட்டது. சிறப்பாக தேர்வு எழுதிய M.பவானி, M.தேவி, M.தனலஷ்மி, M. துர்கா, E.இந்துமதி, S. ஜமுனா, R. நாகலஷ்மி, B. சகிலா, M. சிவகாமி, R. சுனா ராணி, S. உஷா, R. வனஜா ஆகியோருக்கு எங்களது பாராட்டுக்கள். இவர்கள் தங்கள் அனுபவத்தையும், திட்ட பயன்பாட்டையும் பற்றி ராஜ் ஹோல்டிங்ஸின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது பகிர்ந்துக் கொண்டார்கள்.



ஜமுனா, அழிஞ்சிவாக்கம்

"நான் எழுத்தறிவு திட்டத்தில் சேர்ந்த பிறகு, பொருட்களை வாங்கும் போது, அதில் கொடுக்கப்பட்டுள்ள விலை மற்றும் காலவதியாகும் நாள் போன்றவற்றை பார்த்த பின் தான் வாங்குகிறேன்"

"பணி இடத்தில் கோப்புகளை எழுதவும், எனது குழந்தைகளின் மதிப்பெண் அறிக்கை அட்டையை சரி பார்க்கவும் இந்த எழுத்தறிவு திட்டம் உதவியாக இருக்கிறது"



வனஜா, அழிஞ்சிவாக்கம்



லலிதா, முகப்பேர்

"அன்றாடம் பயன்படுத்தும் வார்த்தைகளை கற்றுக் கொள்ளவும், எண்கள் கற்றுக் கொள்ளவும், பேருந்து வழி தடம் மற்றும் எண்களை அறிந்துக் கொள்ள இப் பயிற்சி வகுப்புகள் உதவுகிறது"

# ஆரோக்கியம்

## சமூக சேவா பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்துதல்

நமது முக்கிய நோக்கமான அடிப்படை ஆரோக்கியம் கருத்தில் கொண்டு சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க மக்களை ஊக்குவித்து வருகிறது. கடந்த ஆண்டு, நாம் மாணவர்கள் விளையாடவும், பாதுகாப்பான சுற்றுச்சூழல் உருவாக்கவும், பள்ளி வளாகத்தில் தேவையற்ற களைகளையும் அடர்த்தியாக வளர்ந்த செடிகளையும் அகற்றி, பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்தினோம். இந்திய பிரதமர் நரேந்திர மோடி துவங்கி வைத்த தூய்மை இந்திய இயக்கம் (சுவச்ச பாரத் அபியான்) நாடு தழுவிய இயக்கத்தில் பங்கேற்பதில் நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.


முன் நிலை


தற்போதிய நிலை

## ஆரம்ப சுகாதாரா மையத்திற்கு இன்வெர்டர் வசதி

பொது மக்களுக்கு ஆரோக்கிய வாழ்வு அளிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது அரசின் ஆரம்ப சுகாதார மையம். இதனை கருத்தில் கொண்டு, நீண்ட கால திட்டமாக பஞ்செட்டியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதர நிலையத்தை கண்டறிந்து மேம்படுத்த தொடங்கினோம். இம்மருத்துவமனையின் சேவையால் சுற்றுபுறத்தில் உள்ள 10 கிராமங்கள் பயனடைகிறது. பணி முயற்சிகளின் விவரம் பின்வருமாறு

**முதற்கட்டம்:** ராஜ் ஹோர் இன்டர்நேசனலின் உதவியுடன் புறநோயாளிகள் காத்திருக்கும் நிழற்தாழ்வாரம் அமைக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு நாளும் 30 பேர் தினமும் பயனடைகிறார்கள் என்று சுகாதார கண்காணிப்பார் தெரிவித்தார்.

**இரண்டாம் கட்டம்:**
இதை தொடர்ந்து, பணி மருத்துவரின் உதவியுடன் இம்மருத்துவமனையின் தேவைகளை பற்றி ஒரு விரிவான ஆய்வு நடத்தப் பட்டது. இதில் ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 3 முதல் 4 மணி நேரம் வரை மின் வெட்டு ஏற்படுகிறது. இதனால், எமர்ஜென்ஸி லைட் உதவியுடன் தான் அவசர கால பிரசவங்களை கையாளுகிறார்கள். இந்த அடிப்படை தேவையை


மருத்துவமனையில் இன்வெர்டர்

கருத்தில் கொண்டு, இந்த சுகாதார மையத்துக்கு நாங்கள் ரூ.50,000 செலவில் ஒரு 1.8 கிலோ வோல்ட் மின்சக்தி இன்வெர்ட்டரை நன்கொடையாக வழங்கினோம். இந்த இன்வெர்ட்டர் தற்பொழுது மகப்பேறு பிரிவு, பிரசவ வார்டு, பிரசவத்திற்கு பின் பராமரிப்பு வார்டு ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனை திறம்பட செயல்பட கீழ்கண்ட தேவைகள் உள்ளன:

- 2 இன்குபேட்டர்கள்
- அல்ட்ராசவுண்ட் ஸ்கேனர் இயந்திரம்
- குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்
- சூரிய ஆற்றல்
- அதிக இருக்கை வசதி கொண்ட ஸ்டீல் நாற்காலி
- சுற்றுச்சுவர் (ரூ. 800 ச.அடி)
- முழு கட்டிடம் வெள்ளை அடித்தல் (ரூ. 10 ச.அடி)
- இரும்பு வேலியுடன் கூடிய 17 வேப்ப மரக்கன்றுகள்

பஞ்செட்டியில் அமைந்துள்ள தொழிற்சாலையில் பணியாற்றுகிறவர்களுக்கு இம்மருத்துவமனை மருத்துவ உதவிகளை செய்கிறது. எனவே, இம்மருத்துவமனை நவீனமயமாக்குதலுக்கு தேவையான நிதி திரட்ட, அருகில் உள்ள 10 தொழிற்சாலை நிறுவனங்களுக்கு முன்மொழிவு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**நீங்கள் இந்த உன்னத காரணத்திற்கு தங்கள் ஆதரவை எந்த வகையில் செய்தாலும், அதை தி செரியன் ஃபவுண்டேஷன் அங்கிகரிக்கும்.**

## இலவச மூக்கு கண்ணாடி வழங்குதல்

முகப்பேரில், கடந்த ஆண்டு அக்டோபர் 2013, 3ஆம் தேதி அன்று தி செரியன் ஃபவுண்டேஷன் ராஜ் ஹோல்டிங்ஸ் உடன் இணைந்து கண் மருந்துவ முகாம் நடத்தியது. இம்முகாமில் 33 பேருக்கு மூக்கு கண்ணாடி அணிய வேண்டும் என்று கண்டறியப்பட்டது. இப்பணி யாளர்களுக்கு 6-ஆம் தேதி பிப்ரவரி 2014 அன்று திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் மற்றும் திருமதி. கரினா ஜார்ச் செரியன் மூக்கு கண்ணாடிகளை வழங்கினார்கள்.


பிப்ரவி மாதம் - முகப்பேரில்

## தொடர் பரிசோதனை சேவை

கண் மருத்துவ முகாமில், டாக்டர் பரிந்துரையின்படி, 18 நபர்கள் மருத்துவமனையில் பரிசோதனை செய்யவேண்டியிருந்ததால், அஞ்சிவாக்கத்திலிருந்து 8 நபர்களும், முகப்பேரில் இருந்து 10 நபர்களும், ராஜன் மருத்துவமனை, வேளச்சேரி கிளையில் பிப்ரவி மாதம் 24, 25, 26, மற்றும் மார்ச் மாதம் 3-ஆம் தேதிகளில் பரிசோதனைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். இதில் 17 நபர்கள் மூக்குகண்ணாடி அணிய வேண்டும் என்று கண்டறியப் பட்டது.


ஏப்ரல் மாதம் - முகப்பேரில்

அழிஞ்சிவாக்கத்தில், மார்ச் மாதம் 22-ஆம் தேதி மேலாண்மை அறங்காவலர், திரு. பெஞ்சமின் செரியன் மற்றும் இயக்குநர் திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன் அவர்களும், 7 மூக்கு கண்ணாடிகளை வழங்கினார்கள். முகப்பேரில், ஏப்ரல் 29-ஆம் தேதி, அறங்காவலர் திரு. ஜார்ஜ் B செரியன் 10 மூக்கு கண்ணாடிகளை வழங்கினார்கள்.


அழிஞ்சிவாக்கத்தில் மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டது

## கண் புரை அறுவை சிகிச்சை

தி செரியன் ஃபவுண்டேஷன் சுகாதர தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மேலும், பல நற்செயல்களை செயது வருகின்றது. உதாரணமாக, சங்கரா கண் மருந்துவமணையின் அறக்கட்டளை நிதிக்கு ரூ.10,000.'.- நன்கொடையாக வழங்கியது. இந்நிதியில் கிடைக்கும் வங்கி வட்டியின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் ஆதரவற்றோருக்கு ஆண்டு தோறும் இலவச கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்படுக்கிறது. இந்நிதியின் மூலமாக திரு. சந்திர சேகரன் அவர்களுக்கு இலவச கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

Jaya Jaya Sankara | Hara Hara Sankara

**SANKARA EYE HOSPITAL**
No. 1, Third Cross Street, Sri Sankara Nagar,
PAMMAL, CHENNAI - 600 075.
Website: www.kannoli.net / E-mail: info@kannoli.net
☎ 044- 22484799, 22485299

ISO 9001 CERTIFIED

Trustees : Rtn. B. P. Jain, FCA, Dr. P. Janakiraman, Dr. R. V. Ramani, Sri S. Visvanathan, Sri V. Lakshmanan, Sri Jagdish M. Chanrai
Our Patrons : Sri V.G. Raghavan, Sri N.R. Chandran, Sri T.R. Rajagopalan, Sri Jain Dhaval J. Chandan, Sri Mangal Chand Tater

SEH/2014/DONATION-INFO — April 02, 2014

To
M/s.Cherian Foundation,
No.38, Maloniy Road,
T.Nagar,
Chennai – 600 017.
Ph: 4204 3035 / 36.

Respected Sir/Madam,

Sub: KANNOLI – VISION SAVER FREE CATARACT SURGERY.

We have performed FREE cataract surgery with IOL for **one patient** utilizing the interest accrued by your endowment.

| Name & Address | Age/Sex | D O S | Eye Operated |
|---|---|---|---|
| Sri. S.Chandra Sekar, (MRD No. 262671) S/o Siva Sankar, No: 26-47-Kajoor, Greems St, Chittoor, AP. | 69/M | 01.04.14 | Left Eye |

He is extremely happy and the vision restoration is good. We once again thank you for your assistance. We have enclosed one copy of our appeal to you for strengthening our corpus fund. We welcome you, your relatives and friends to visit our hospital and encourage us in our "KANNOLI PROJECT".

Thanking You,



For Sankara Eye Hospital,
(J.BABU)
General Manager
94443-80698

Note: Whenever you change the address please intimate.

SEH / L.H. / 01 /03-14

Our Partners in Rural Eye Care:
Rotary Club of Madras Fort, DBCS, Sightsavers International, U.K., Mission for Vision & RMP Infotec Private Limited

சங்கரா கண் மருத்துவமனையிலிருந்து வந்த கடிதம்

மேலும், திருமதி மகாலட்சுமி அவர்கள் மே மாதம் 29-ஆம் தேதி அன்று ராஜன் மருத்துவ மனையின் மூலமாக இலவச கண் புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

## பொது மருத்துவ முகாம்

தி செரியன் ஃபவுண்டேஷன் ராஜ் ஹோர் இன்டர்நேசனலுடன் இணைந்து, ஜீலை மாதம் 12 ஆம் தேதி அன்று அழிஞ்சிவாக்கத்தில் இலவச பொது மருத்துவ முகாமை நடத்தியது. டாக்டர் பிரக்னா மற்றும் டாக்டர் அனிஷா அவர்களுடைய குழுவின் உதவியால் 275 பேர் பயனடைந்தார்கள்.

### ஆய்வு விபர அட்டவனை

| வ.எ. | சோதனை வகை | பயனாளிகள் |
|---|---|---|
| 1. | இரத்த பிரிவு கண்டறிதல் | 140 |
| 2. | சர்க்கரை பரிசோதனை | 45 |
| 3. | ரத்த சோகை கண்டறிதல் | 28 |
| 4. | ஸ்கேன்/பிற டெஸ்ட்க்கு பரிந்துரை | 50 |
| | மொத்த பயனாளிகள் | 263 |


பொது மருத்துவ பரிசோதனை


சர்க்கரை பரிசோதனை

## இலவச சத்து மாத்திரை வழங்குதல்

பஞ்செட்டி மற்றும் அதன் அருகில் உள்ள 28 பெண்கள் பொது மருத்துவ முகாமில் இரத்த சோகை உள்ளது என்று கண்டறியப்பட்டது. ஆரம்ப சுகாரத நிலையத்தின் தலைமை மருத்துவ அதிகாரியிடம் இம்மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்தோம். இதன் மூலம், அனைவருக்கும் இரும்பு சத்து மாத்திரைகள் இலவசமாக அளிக்கப்பட்டது. பஞ்செட்டி மருத்துவமனையில் உள்ள மருத்துவ அதிகாரிகள், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.


இரும்பு சத்து மாத்திரை


இரும்பு சத்து மாத்திரைகளை பயனாளிகளுக்கு வழங்குதல்

## காது கேட்கும் கருவி வழங்குதல்

நமது வேண்டுகோளின் பேரில், 7 ஆண்டுகளாக கேளாமையினால் பாதிக்கப்பட்டு வரும் திருமதி. சுமதி அவர்களுக்கு, திருமதி. மனோ பக்தவச்சலம் அவர்கள் காது கேட்கும் கருவியை நன்கொடையாக வழங்கினார்கள். மே மாதம் 22-ஆம் தேதியில் அதை சுமதி அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார்



இயக்குநர் பயனாளியுடன்

# சமுதாய பங்கேற்பு

## 'Schools into Smiles' கலை நிகழ்ச்சிகள்

இவ்வாண்டு RI Dist 3230's Rotary Centenary Charitable Trust உடன் இணைந்து கீழ்கண்ட நோக்கங்களுடன் 2 இடங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது

- புறநகரில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த தளம் அமைத்தல்
- குழந்தைகள் மத்தியில் ஆரோக்கியமான போட்டிகளை உருவாக்குதல்
- இந்நிகழ்ச்சியில் மூலமாக குழந்தைகளுக்கு சமூக பிரச்சனைகளை எடுத்துரைத்தல்

### ஆரணியில் நடைப்பெற்ற முதல் கலை நிகழ்ச்சிகள்

நவம்பர் மாதம் 2-ஆம் தேதி அன்று, ஆரணியில் 'Schools Into Smiles' திட்டத்தின் மூலமாக Rotary Centenary Charitable trust உடன் இணைந்து SS Hr. Sec. School பள்ளியில் கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது.

**நிகழ்ச்சியின் சிறப்பம்சம்:**

- ஆரணி, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தை சாரந்த 310 குழந்தைகளும் மற்றும் 24 இன்டரக்டர்ஸ் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.
- கல்வி, சுத்தம், சுகாதாரம் மற்றும் சுற்றுபுற சூழல் போன்ற சமூக தலைப்பின் கீழ் குழு நடனம், ஓவியப் போட்டி, மாறுவேடப் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது.
- இவ்வாண்டின் மைக்ரோசாப்ட் நிறுவத்தின் புதுமை படைப்பாளி ஆசிரியர் விருதையும், தமிழ்நாடு சிறந்த ஆசிரியர் விருதும் பெற்ற 8 பேரில் ஒருவரான திரு. சங்கர் அவர்கள் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு, சிறப்பு பயிற்சிகளை அளித்தார்.
- Rtn. M. பாலமுரளி கிருஷ்ணன் அவர்கள் இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்.
- இவ்விழாவை ஒருங்கிணைத்து சிறப்பாக செயல்படுத்தி Rtn.கிறிஸ்டோபர் தேவபிரகாசம் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.



ஆரணியில் பங்கேற்பாளர்கள்



ஓவிய போட்டிகள்

## சென்னையில் கலை நிகழ்ச்சிகள்

நவம்பர் மாதம் 16-ஆம் தேதி அன்று, 7-ஆம் ஆண்டு 'Schools into Smiles' கலை நிகழ்ச்சி Rotary Centenary Charitable Trust உடன் இணைந்து சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்பட்டது


**நிகழ்ச்சியின் சிறப்பம்சம்:**

- 23 பள்ளியிலிருந்து 276குழந்தைகள் பங்கேற்றனர்.
- இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் 10 அம்ச திட்டத்தின் 4வது திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது போல, கல்வி, சுகாதாரம் குடிநீர், மின்சாரம், சாலை வசதி ஆகியவற்றுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்ற தலைப்பின் அடிப்படையில் குழு நடனம், ஓவியப் போட்டி, அறிவியல் மாதிரி கண்காட்சி மற்றும் மாறுவேடப் போட்டி போன்ற பல போட்டிகள் நடத்தப்பட்டது.
- துப்புரவு, நீர் மற்றும் கழிவு மேலாண்மை பற்றி Rtn.மங்களம் பால சுப்ரமணியன், பம்மல் பசுமை எக்ஸினோராவின் தலைவர் அவர்கள் உரையாற்றினார்.



நிகழ்ச்சியில் பங்கேற்பாளர்கள்

- இவ்வாண்டின் தமிழ்நாடு சிறந்த ஆசிரியர் விருது பெற்ற மாற்று திரனாளி திருமதி. சரஸ்வதி அவர்கள் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு, மாணவர்களின் முன்னேற்றத்திற்கு தேவையான தொலை நோக்கு பார்வை பற்றிய பயிற்சி அளித்தார். மேலும் அவர் தனது உரையில் அர்ப்பணிப்புடன், பள்ளி மற்றும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு எடுத்த பல்வேறு முயற்சிகளை பற்றி கூறி ஆசிரியர்களை ஊக்குவித்தார்.
- நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரனும், இளைய திலகம் பிரபுவின் மகன், கும்கி படத்தின் மூலம் புகழ்பெற்ற நடிகர் விக்ரம் பிரபு, அவர்களுடைய பேச்சு குழந்தைகளுக்கு பெரும் மகிழ்ச்சியை கொடுத்தது.
- இவ்விழாவிற்கு TCS நிறுவனத்தின் முன்னாள் பிரதான நிதி கட்டுப்பாட்டாளரும் மற்றும் நிர்வாக இயக்குநராக பயணியாற்றியவரும், தற்போது, Kasthuri & Sons ltd குழுமத்தின் நிர்வாக குழு அங்கினத்தினரான ஸ்ரீ.S.மகாலிங்கம் அவர்கள் தலைமைத்தாங்கினார்.
- Rtn. நடராஜன் நாகோஜி, ரோட்டரி மாவட்ட 3230 ஆளுநர் 2016, மற்றும் Tr. சுமன் ஊரா, Round Table தேசிய துணைத் தலைவர் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார்கள்.
- அபாகஸ் பயிற்சி பெற்ற குழந்தைகள் எண் கணித திறமையை வெளிப்படுத்தினார்கள்.



பரிசு பெற்ற குழந்தைகள்



பள்ளிகளுக்கு கணினி

## டாக்டர் குப்தா பள்ளியில் விளையாட்டு தினம்

பள்ளி நிர்வாகத்தின் வேண்டுகோளின் பேரில் விளையாட்டு தினத்தில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்க இரண்டாவது முறையாக ரூ. 7, 200.00 நிதியுதவை அளித்தது, தி செரியன் ஃபவுண்டேஷன். நமது நிறுவனத்தின் சார்பாக திரு.சுரேஷ் மாதவன், பணிதள மேலாளலர் அவர்களும், திரு.அன்பரசு, HR பணியாளர் அவர்களும், பரிசு அளிப்பு விழாவில் கலந்துக் கொண்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

## தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி


விழிப்புணர்வு நிகழ்ச்சி

ராஜ் ஹோர் இன்டர்நேசனலுடன் இணைந்து, பிப்ரவரி மாதம் 26-ஆம் தேதி அன்று சினேகா தற்கொலை தடுப்பு மையத்தின் உதவியுடன் அழிஞ்சிவாக்கத்தில் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இம்மையத்திலிருந்து மூன்று தன்னார்வ தொண்டர்கள் (திருமதி. சவிதா, திருமதி. சாந்தி மற்றும் திருமதி. சுமித்திரா) மூலமாக இந்த விழிப்புணர்வு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. மேலும், தற்கொலை தடுப்பு பற்றிய துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர். இதன் நிகழ்ச்சியின் மூலம் 30 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

**சினேகா தற்கொலை தடுப்பு மையத்தை தொடர்பு கொள்ள:**
**24X7 ஹெல்ப்லைன்:** 91-44-2464 0050, 91-44-2464 0060
**ஹெல்ப்லைன் மின்னஞ்சல்:** help@snehaindia.org
**நிர்வாக மின்னஞ்சல்:** admin@snehaindia.org

## மலிவான பொருட்கள் விற்பனை

தி செரியன் ஃபவுண்டேஷன் அறங்காவலர்களால் இந்த நிதி திரட்டும் நிகழ்ச்சி ஆண்டு தோறும் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சிக்காக, நலம் விரும்பிகள், நண்பர்கள் மற்றும் பணியாளர்கள் ஆடைகள், வீட்டு உபயோக பொருட்கள், பொம்மைகள், புத்தகங்கள், போன்ற பொருட்களை நன்கொடையாக வழங்கியதால் மலிவான விலைக்கு தேவையானவர்களுக்கு அவைகள் விற்கப்பட்டது

இவ்வாண்டு, இந்நிகழ்ச்சி ராஜ் ஹோல்டிங்ஸ் உடன் இணைந்து 4 இடங்களில் நடத்தப்பட்டது

- **தி. நகரில் - பிப்ரவரி 2014, 28-ம் தேதி**
- **அழிஞ்சிவாக்கத்தில் - மார்ச் 2014, 1-ம் தேதி மற்றும் 3-ம் தேதி**
- **முகப்பேர் - மார்ச் 2014, 7-ம் தேதி**
- **கொப்பலில் - மார்ச் 2014, 11-ம் தேதி மற்றும் 12-ம் தேதி**

இதன் மூலம் ரூ. 70,000 நிதி திரட்டப்பட்டது. பொருட்களை நன்கொடையாக வழங்கிய, நலம்விரும்பிகள் அனைவருக்கும் எங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். பொருட்களை பிரிக்கவும், அதை விற்பனை செய்ய உதவியாக இருந்த ஒவ்வொருக்கும் எங்கள் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம். **இவ்விற்பனையின் மூலமாக திரட்டப்பட்ட நிதியின் உதவியால், பொன்னேரி பஞ்செட்டி கிராமத்தில் அமைந்துள்ள பொது சுகாதார மையத்திற்கு தேவையான இன்வெர்டர் வழங்கப்பட்டது.**


கொப்பல், கர்நாட்டக்கா


தி. நகரில்

**பொருட்கள் மற்றும் நன்கொடைகள் வழங்க எங்களை தொடர்புக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் இப்பொருட்களை திரட்டி சேர்க்கிறோம். இதற்கு தங்களின் மேலான ஆதரவை வரவேற்கின்றோம்.**

## 7வது மகளிர் தின விழா

ராஜ் ஹோல்டிஸ் உடன் இணைந்து அதன் தலைமை அலுவலகத்தில் அகில உலக மகளிர் தினம் மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்பட்டது. இவ்வாண்டின் தலைப்பு "பெண்களுக்கு நிதி கல்வி அறிவின் முக்கியத்துவம்'. இவ்விழாவின் சிறப்பு விருந்தினர் கனரா வங்கியின் சென்னை வட்ட அலுவலகத்தில் மேலாளராக பணியாற்றும் திருமதி. B. சுமதி ஹரிஹரன் அய்யர் அவர்கள். முன்னாள் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் வீரர் மற்றும் முதல் தேசிய மற்றும் சர்வதேச மகளிர் அம்பயராக இருந்த அவர்கள் தனது உரையில் நிதி மேலாண்மையில் உள்ள பல்வேறு அம்சங்களை பற்றியும், வங்கி முதலீடு பற்றிய விவரங்களையும், அதற்கு தேவையான உதவி மையம் ஏற்படுத்தவும் முடியும் என்று கூறினார். மேலும் திருமதி அனிலா கொலேச்சா அவர்கள் ரிப்பனை கொண்டு செயற்கை பூக்கள் தயாரித்தல் பற்றிய அரைமணி நேரம் செயல் விளக்கத்தை அளித்தார்.


செயற்கை பூக்கள் தயாரித்தல் - செயல் விளக்க வகுப்பு

## மரம் நடுதல்

நோயாளிகளுக்கும், அவர்களை பரிசோதனை செய்யும் மருத்துவர்களுக்கு நிழல் தரவும், சுத்தமான காற்று பெறவும், தி செரியன் ஃபவுண்டேஷன், பஞ்செட்டியில் அமைத்துள்ள பொது சுகாதார நிலையத்திற்கு இரும்பு வேலியுடன் 6 வேப்ப மரக்கன்றுகளை நட்டுள்ளது.



இரும்பு வேலியில் வேப்ப மரம்

## தத்தெடுத்த பள்ளிகளில் கிறிஸ்துமஸ் விழா

டிசம்பர் 22-ஆம் தேதி அறங்காவலர்கள் தத்தெடுத்த பள்ளி குழந்தைகளுடன் தங்களது கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியை பகிர்ந்துக் கொண்டார்கள். குழந்தைகள் கரோலஸ் பாடினார்கள். ஒரு குழந்தை சாண்டா கிளாஸ் போல உடை அணிந்து, ஜிங்கில் பெல்ஸ் பாட்டுக்கு ஆடிக் கொண்டே இனிப்புகள் வழங்கி மற்ற குழந்தைகளை மகிழ்வித்தான். நமது அறங்காவலர்கள் சார்பாக, ராஜ் ஹோர் இன்டர்நேசனல் நிறுவனத்தின் சார்பாக திரு. சுந்தரேசன் அவர்கள் சமூக சேவா பள்ளியிலும், B & H எக்ஸ்போர்ட்ஸின் சார்பாக உமா மகேஷ்வரி அவர்கள் ரோட்டரி மாதிரி பள்ளியிலும், குழந்தைகளுக்கு கேக்குகளை வழங்கினார்கள்.


ரோட்டரி மாதிரி பள்ளி


சமூக சேவா பள்ளி

## அறங்காவலர்களின் செய்தி

### திரு. பெஞ்சமின் செரியன், மேலாண்மை அறங்காவலர்



திரு. பெஞ்சமின் செரியன் அவர்கள், ரோட்டரி இந்தியாவின் எழுத்தறிவு மிஷனின் TEACH திட்டத்திற்கு சர்வதேச நிதி திரட்டும் குழுவிற்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### திரு. ஜார்ஜ் B செரியன், அறங்காவலர்



திரு. ஜார்ஜ் B செரியன் அவர்கள் 2014-15 ஆம் ஆண்டிற்கு மெட்ராஸ் மிட்டவுன் ரவுண்டு டேபிள் (MMRT-42) தலைவராக பணியாற்றுகிறார். இவர் தலைமையின் கீழ் பள்ளிக்கரனை அரசு மேல்நிலைப் பள்ளியில் 18 புதிய வகுப்பறைகள் கட்ட நிதி திரட்டப்பட்டது. மேலும் ரோட்டரி கிளப் ஆப் மெட்ராஸின் ஃபவுண்டேஷன் தலைவராக செயலாற்றுகிறார்.

TANGLED

ஒரு சமூக இயக்கமான Tangled திட்டத்தில் ராஜ் ஹேர் இன்டர்நேசனலுடன் இணைந்து உள்ளோம். மருத்துவ சிகிச்சையால் தங்கள் தன்னம்பிக்கையும், தலை முடியும் இழந்த புற்று நோயாளிகளுக்கு நன்கொடையாக விக் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம்.

## எங்களது உளமார்ந்த நன்றிகள்

### நன்கொடையாளர்கள்

- பிரான்ஸ் நாட்டை சார்ந்த திரு. நாதிர் கென்டி அவர்கள் அனாதை குழந்தைகளின் நலனுக்காக ரூ.1,50,000/- நன்கொடை வழங்கினார்.
- திருமதி. லீலா திரவியம் - ரூ. 10,000/-
- திருமதி. வனிதா ராஜ்குமார் - ரூ. 5,000/-
- திருமதி. மனோ பக்தவத்சலம் - காது கேட்கும் கருவி

### ஆதரவாளர்கள்

- டாக்டர். ரவிந்திரன் (மருத்துவர் - பஞ்செட்டி)
- திரு. மணி (சுகாதார கண்காணிப்பாளர் - பஞ்செட்டி)
- Rtn. கிறிஸ்டோபர் தேவபிரகாசம
- Rtn. முருகானந்தம்
- Rtn. ராமதாஸ் C.N. (ஓய்வு பெற்ற ஐ.ஏ.ஸ் அதிகாரி)

### மலிவான பொருட்கள் விற்பனை நன்கொடையாளர்கள்

- திருமதி. அனிதா
- திருமதி. ஆனி
- செல்வி. அர்ச்சனா
- செல்வி. திவ்யா ராம்பிரசாத்
- திருமதி. பக்ரியா கப்பாசி
- திருமதி. காயத்திரி
- திருமதி. இந்து பட்கே
- திருமதி. ஜெய்ஸ்ரீ மிட்டல்
- திருமதி. ஜோதி அகர்வால்
- திருமதி. காஷிஷ் அகுஜா
- திருமதி. மஞ்சுளா சாயீராம்
- செல்வி. மினால் கிருபாளினி
- திருமதி. மிருதுளா
- திருமதி. பங்கஜம்
- திருமதி. சரோஜினி
- திருமதி. ஷாலினி
- திருமதி. ஷீலா ஷெட்டி
- திருமதி. ஷிவானி
- திரு. ஸ்ரீதர்
- திரு. விவேக் கருணாகரன்
- திருமதி. தனுஜா
- திருமதி. உஷா சந்திரகுமார்
- திருமதி. வனிதா ராஜ்குமார்

**ஊழியர்களுக்கும் பணியாளர்களுக்கும் எங்களது நன்றிகள்**

RAJ HOLDINGS

RAJ GLOBAL HOLDING Pvt. Ltd.

RAJ HAIR INTL Pvt Ltd.

RAJ REDEF MEDIA Pvt. Ltd.

Raj Waterscape Properties Pvt. Ltd.

B & H EXPORTS

RAJ TRADING

### நன்கொடை விவரங்கள்:

தங்கள் நன்கொடைகளை “The Cherian Foundation” என்ற பெயரில் காசோலை (Cheque) அல்லது வரைவோலை (Demand Draft) ஆக எடுத்து எங்களுக்கு அனுப்பலாம். தாங்கள் கொடுக்கும் நன்கொடைகள் அனைத்தும், வருமான வரி சட்டத்தின் 80 G பிரிவின் (u/s 80 G of the Income Tax Act vide Certificate No. DIT (E) No.2 (67)/03-04 கீழ் வரி விலக்கு பெறுகின்றன.

**வங்கி கணக்குடையவர் பெயர்:** The Cherian Foundation
**வங்கி பெயர் மற்றும் கிளை:** ICICI Bank, Teynampet
**கணக்கு வகை:** சேமிப்பு கணக்கு
**கணக்கு எண்:** 000101212525
**ஆர்டிஜிஎஸ்/என்இஎப்டி/ஐஎப்எஸ்சி குறியீடு:** ICIC 00000001


### எங்கள் முகவரி

38, மெலோனி ரோடு, தி. நகர், சென்னை - 600 017

தொலைப்பேசி:044-49278133

மின்னஞ்சல்: projects@cherianfoundation.org

இணையதளம்: www.cherianfoundation.org



### ஆசிரியர் குழு

திருமதி. வல்சா பெஞ்சமின் செரியன், இயக்குநர்
திருமதி. கரினா ஜார்ஜ் செரியன், அறங்காவலர்
திரு. விஜய் சார்லஸ் வெஸ்லி, திட்ட ஒருங்கிணைப்பாளர் TCF
திரு. இராபர்ட் ரிச்சர்டு, திட்ட ஒருங்கிணைப்பாளர் RCCT